Australian Government
Department of Home Affairs

# தடுப்பூசி தொடர்பான விதிமுறைகள்

உங்கள் பயணத்தை முன்பதிவு செய்வதற்கு முன், சர்வதேச பயணத்தை மேற்கொள்வதற்கு அவுஸ்திரேலியாவின் தடுப்பூசி விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்கிறீர்களா என்று சரிபார்க்கவும்.

இது அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கான உங்கள் தகுதியையும், நீங்கள் அவுஸ்திரேலியா வந்தடைந்தவுடன் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதையும் பாதிக்கலாம்.

நீங்கள் அவுஸ்திரேலிய குடிமகனாகவோ நிரந்தர குடியிருப்பாளராகவோ இருந்தால், அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறுவதற்கான உங்கள் தகுதியையும் இது பாதிக்கிறது.

# அவுஸ்திரேலியாவின் தடுப்பூசி விதிமுறைகளைப் பூர்த்தி செய்வது

அவுஸ்திரேலியாவின் தடுப்பூசி விதிமுறைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவுஸ்திரேலியாவின் எல்லைக்குள் நுழைவதற்குத் தேவையான 'தடுப்பூசி முழுவதையும் போட்டுக்கொண்ட' பயணியாகக் கருதப்படுவதற்கும், நீங்கள் பின்வரும் ஆதாரங்களில் ஏதேனும் ஒன்றை வழங்க வேண்டும்:

- சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுவதையும் போட்டுக் கொண்டவர் எனஅவுஸ்திரேலியா வரையறுத்து இருப்பவற்றை பூர்த்தி செய்கிற ஆதாரம்
- 12 வயதுக்குட்பட்ட குழந்தை என்பதற்கான ஆதாரம்
- முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட ஒரு பெரியவருடன் பயணம் செய்யும் 12 முதல் 17 வயதுக்குட்பட்ட குழந்தை என்பதற்கான ஆதாரம்; அல்லது
- மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பூசி போட்டுக் கொள்ள இயலாது என்பதற்கான ஆதாரம்.

மேலே உள்ள பிரிவுகளில் ஏதேனும் ஒன்று உங்களுக்குப் பொருத்தமானதாக இருந்தால், தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகள் அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கான வழிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

மேலே உள்ள பிரிவுகள் எதுவும் உங்களுக்குப் பொருத்தமானதாக இல்லை என்றால், தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பயணிகள் அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கான வழிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

**அவுஸ்திரேலியாவில் நுழையும் பின்வரும் விசாதாரர்களின் விசா ரத்து செய்யப்படலாம், மேலும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படலாம்:**

- **அவுஸ்திரேலியாவின் எல்லைக்குள் நுழைவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப, சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுவதையும் போட்டுக்கொள்ளாதவர்கள்; அல்லது**
- **அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, கோவிட்-19 தடுப்பூசிக்கு மருத்துவரீதியாக ஒவ்வாமை எதுவும் இல்லாதவர்கள்; அல்லது**
- **தடுப்பூசி போட்டுக்கொள்வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட பிரிவில் இல்லாதவர்கள் அல்லது தனிப்பட்ட முறையில் பயண விலக்கு பெற்றவர்கள்.**

# சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுவதையும் போட்டுக்கொண்டவர்கள்

Therapeutic Goods Administration (TGA) அங்கீகரித்த அல்லது ஒப்புதல் அளித்த தடுப்பூசியின் முதன்மை கோர்ஸை நிறைவு செய்திருந்தால், அவுஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் நீங்கள் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டதாகக் கருதப்படுவீர்கள். இவற்றுள் கலவை டோஸ்களும் அடங்கும்.

சர்வதேச பயண நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட தற்போதைய தடுப்பூசிகள் மற்றும் டோஸ்கள் பின்வருமாறு:

- குறைந்தது 14 நாட்கள் இடைவெளியில் போட்டுக்கொள்ள வேண்டிய இரண்டு தடுப்பூசி டோஸ்கள் பின்வருமாறு:
    - அஸ்ட்ராஜெனிகா வாக்ஸ்செவ்ரியா (AstraZeneca Vaxzevria)
    - அஸ்ட்ராஜெனிகா கோவிஷீல்ட் (AstraZeneca Covishield)
    - ஃபைசர் (Pfizer)/பயோஎன்டெக் காமிர்னாட்டி (Biontech Comirnaty)
    - மாடர்னா ஸ்பைக்வாக்ஸ் (Moderna Spikevax) அல்லது டகேடா (Takeda)
    - சினோவாக் கொரோனாவாக் (Sinovac Coronavac)
    - பாரத் பயோடெக் கோவாக்சின் (Bharat Biotech Covaxin)
    - சினோபார்ம் (Sinopharm) BBIBP-CorV, இது அவுஸ்திரேலியாவிற்குள் நுழையும்போது 60 வயதுக்குட்பட்டவர்களுக்கானது
    - கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் ஸ்புட்னிக் வி (Gamaleya Research Institute Sputnik V)
    - நோவாவாக்ஸ்/ பயோசெலெக்ட் நுவாக்ஸோவிட் (Novavax/Biocelect Nuvaxovid)

    அல்லது

- பின்வரும் தடுப்பூசியின் ஒரு டோஸ்:
    - ஜான்சன் & ஜான்சன்/ ஜான்சன்-சிலாக் கோவிட் தடுப்பூசி (Johnson & Johnson/ Janssen-Cilag COVID Vaccine)

**மற்றும்** நோய்த்தடுப்புக்கான தடுப்பூசியின் இறுதி டோஸ் போட்டுக் கொண்டதிலிருந்து குறைந்தது 7 நாட்கள் கடந்திருக்க வேண்டும்.

அனைத்து தடுப்பூசிகளும் TGA ஆல் ஒப்புதல் அளிக்கப்படும் அல்லது அங்கீகரிக்கப்படும் வரை, கலவை டோஸ்களை போட்டுக்கொண்டவர்கள் சர்வதேச பயணத்திற்கு முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டதாகக் கருத்தில் கொள்ளப்படுவர். TGA பிற கோவிட்-19 தடுப்பூசிகளையும் மதிப்பீடு செய்து வருகிறது, இவை எதிர்காலத்தில் அவுஸ்திரேலியாவிற்கு வரும் பயணத்திற்காக அங்கீகரிக்கப்படலாம்.

அவுஸ்திரேலியாவில் உள்ள அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியை இலவசமாகப் பெறலாம், அவுஸ்திரேலிய விசாதாரர்கள், செல்லுபடியாகும் விசா இல்லாத குடிமக்கள் அல்லாதவர்கள் மற்றும் குடியேற்றத் தடுப்பு வசதிகளில் வசிப்பவர்கள் இதில் அடங்குவர்.

# தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் என்பதற்கான ஆதாரத்தை வழங்குவது

சர்வதேச பயணத்திற்குத் தேவையான அவுஸ்திரேலியாவின் தடுப்பூசி விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்கிறீர்கள் என்பதற்கான சான்றுகளை விமான ஊழியர்களிடம் நீங்கள் காட்ட வேண்டும்.

டிஜிட்டல் பயணிகள் அறிவிப்பை பூர்த்தி செய்யும்போது இந்த ஆதாரத்தையும் பதிவேற்றம் செய்து அவுஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கு முன் வழங்கும்படி கேட்கப்படுவீர்கள்.

நீங்கள் அவுஸ்திரேலிய குடிமகனாகவோ, நிரந்தர குடியிருப்பாளராகவோ இருந்தால், நீங்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறும் முன் விமான ஊழியர்களிடம் உங்கள் ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியாவில் தடுப்பூசி போட்டிருந்தால், விமான ஊழியர்களிடம் உங்கள் சர்வதேச கோவிட்-19 தடுப்பூசிச் சான்றிதழை (ICVC) காட்ட வேண்டியிருக்கும். உங்கள் ICVC-ஐ Express Plus Medicare செயலியைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது myGov என்ற உங்கள் மெடிகேர் ஆன்லைன் கணக்கு வாயிலாக பதிவிறக்கம் செய்யலாம். நீங்கள் பிரிண்ட் செய்வதற்கு ICVC ஆனது PDF வடிவத்தில் வழங்கப்படுகிறது அல்லது உங்கள் தொலைபேசியில் மின்னணு முறையில் வைத்துக் கொள்ளலாம். நீங்கள் விமானத்தில் செக்-இன் செய்யும்போது விமான நிறுவனங்கள் இதைக் கேட்கும்.

நீங்கள் வெளிநாட்டில் தடுப்பூசி போட்டிருந்து ICVC உங்களிடம் இல்லாவிட்டால், உங்களின்வெளிநாட்டுத் தடுப்பூசிச் சான்றிதழை விமான ஊழியர்களிடம் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் வெளிநாட்டில் தடுப்பூசி போட்டிருந்து, ICVC பெற விரும்பினால், உங்கள் வெளிநாட்டுத் தடுப்பூசிகளை அவுஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில் (AIR) சேர்க்கலாம். இதைச் செய்த பிறகு, நீங்கள் ICVC க்கு விண்ணப்பிக்கலாம்.

**கவனத்தில் கொள்ளவும்,** உங்களிடம் தடுப்பூசிச் சான்றிதழ் இருந்தால், அவுஸ்திரேலியாவின் சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசியை நீங்கள் முழுமையாக போட்டுக்கொண்ட பயணி என்று தானாகவே **அர்த்தமாகிவிடாது**. உதாரணமாக, இரண்டு டோஸ் தடுப்பூசியில் ஒரு டோஸ் மட்டுமே நீங்கள் போட்டுக் கொண்டதாக உங்கள் தடுப்பூசிச் சான்றிதழ் காட்டலாம். உங்கள் தடுப்பூசிச் சான்றிதழானது, சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுமையாக போடப்பட்டது என அவுஸ்திரேலியா வரையறுத்தவற்றை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

உங்கள் தடுப்பூசி நிலையை தெரிந்து வைத்திருப்பதும், அவுஸ்திரேலியாவிற்குச் செல்வதற்கும் அங்கிருந்து வருவதற்கும் உங்களின் தடுப்பூசிச் சான்றிதழ் செல்லுபடியாகுமா என்பதைச் சரிபார்க்க வேண்டியதும் உங்களுடைய பொறுப்பு.

## உங்கள் தடுப்பூசிச் சான்றிதழில் உள்ள பெயர் உங்கள் பாஸ்போர்ட்டில் உள்ள பெயருடன் பொருந்தவில்லை என்றால்

நீங்கள் அவுஸ்திரேலிய பாஸ்போர்ட் வைத்திருப்பவராக இருந்து, உங்கள் பெயரை மாற்றியிருந்தால், அவுஸ்திரேலிய பாஸ்போர்ட் அலுவலகத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் புதிய பாஸ்போர்ட்டை எப்படிப் பெறுவது என்பது பற்றிய தகவலைக் கண்டறியலாம்.

அவுஸ்திரேலியாவில் தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும், உங்கள் தடுப்பூசிச் சான்றிதழில் உள்ள பெயர் விவரங்கள் உங்கள் பாஸ்போர்ட்டில் உள்ள பெயருடன் பொருந்தாத காரணத்தால் ICVC -ஐப் பெற முடியவில்லை என்றால், நீங்கள் அவுஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேடு அலுவலகத்தைத் தொடர்புகொள்ள வேண்டும்.

உங்கள் பாஸ்போர்ட்டில் உள்ள பெயருடன் பொருந்தாத வெளிநாட்டு தடுப்பூசிச் சான்றிதழுடன் நீங்கள் பயணம் செய்கிறீர்கள் என்றால், திருமணச் சான்றிதழ் அல்லது ஓட்டுநர் உரிமம் போன்ற உங்கள் பெயருக்கான பிற சான்றுகள் உங்களிடம் இருப்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.

# பிள்ளைகளுக்கான ஏற்பாடுகள்

பின்வரும் பிரிவுகளில் உள்ள பிள்ளைகள், தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகளின் அதே ஏற்பாடுகளின் கீழ் பயணம் செய்யலாம்:

- 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகள்; அல்லது
- முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட பெரியவர் ஒருவருடன் பயணம் செய்யும் 12 முதல் 17 வயது வரையான பிள்ளைகள்

பிள்ளைகளுக்கான வயதுச் சான்றாகவும் பாஸ்போர்ட் பயன்படுத்தப்படும்.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அல்லது பகுதியளவு தடுப்பூசி போட்டுக்கொண்ட பிள்ளைகளுடன் பயணம் செய்யும் குடும்பமாக நீங்கள் இருந்தால், நீங்கள் போக்குவரத்து செய்யும் மற்றும் பயணம் செய்யத் திட்டமிடும் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்துடைய

தனிமைப்படுத்திக் கொள்ளும் அல்லது சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளும் விதிமுறைகளையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும். கூடுதல் தகவலுக்கு மாநிலம் மற்றும் பிரதேச நுழைவு விதிமுறைகளைப் பார்வையிடவும்.

# மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாவிட்டால்

மருத்துவக் காரணங்களுக்காக நீங்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாவிட்டால், மருத்துவக் காரணங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்களை நீங்கள் வழங்க வேண்டும்.

நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை வழங்கினால், தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகளுக்கு உள்ள அதே பயண ஏற்பாடுகளின் கீழ் நீங்கள் பயணிக்க முடியும். நீங்கள் பயணம் செய்வதற்கு முன் விமான ஊழியர்களிடம் உங்கள் ஆதாரத்தைக் காட்ட வேண்டியிருக்கும்.

நீங்கள் போக்குவரத்து செய்யும் மற்றும் பயணம் செய்யத் திட்டமிடும் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்துடைய தனிமைப்படுத்திக் கொள்ளும் அல்லது சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளும் விதிமுறைகளையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும். உங்கள் பார்வைக்காக: மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களின் வருகை விதிமுறைகள்.

**மருத்துவ முரண்பாட்டின் காரணமாக நீங்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது என்பதற்கான ஆதாரம் பயண விலக்கிலிருந்து தனிப்பட்டது.**

## அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறும்போது மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது என்பதற்கான சான்று

நீங்கள் அவுஸ்திரேலிய குடிமகனாகவோ, அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறும் நிரந்தர குடியிருப்பாளராகவோ இருந்தால், அவுஸ்திரேலியாவில் கிடைக்கும் அனைத்து கோவிட்-19 தடுப்பூசிகளுக்கும் உங்களுக்கு மருத்துவ முரண்பாடுகள் உள்ளன என அவுஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில் (Australian Immunisation Register, AIR) அறிக்கை செய்ததற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும். உங்கள் அவுஸ்திரேலிய கோவிட்-19 டிஜிட்டல் சான்றிதழை அல்லது உங்கள் தடுப்பூசி வரலாறு அறிக்கையை ஆதாரமாக வழங்க வேண்டும்.

AIR இல் ஒரு தற்காலிகமான மருத்துவ முரண்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தால், கோவிட்-19 டிஜிட்டல் சான்றிதழ் அது 'செல்லுபடியாகும்' திகதியைக் காண்பிக்கும். அந்தக் காலம் முடிவடைந்த பிறகு, நீங்கள் செய்ய வேண்டியது:

- நீங்கள் இப்போது கோவிட்-19 தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முடியுமா என்பதைப் பார்க்க உங்கள் மருத்துவரிடம் பரிசோதிக்கவும்; அல்லது
- உங்கள் மருத்துவ முரண்பாடு இன்னும் அப்படியே இருக்கிறது எனில், AIR இல் உங்கள் நிலையைப் புதுப்பிக்குமாறு உங்கள் மருத்துவரிடம் கேளுங்கள்.

சேவைகள் அவுஸ்திரேலியா வரையறுத்துள்ளபடி தகுதியான சுகாதார வல்லுநர்கள் மட்டுமே AIR க்கு மருத்துவ முரண்பாடுகளை அறிக்கை செய்ய முடியும். உங்கள் மருத்துவ முரண்பாடு குறித்து AIR க்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களால் நிரூபிக்க முடியாவிட்டால், அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற விலக்கு பெற விண்ணப்பிக்க வேண்டும்.

உங்கள் மருத்துவ முரண்பாடுகள் AIR இல் பட்டியலிடப்பட்டுள்ளன என்பதற்கு **ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை வழங்க முடியாவிட்டால்**, **நீங்கள் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற பயண விலக்கு பெற** **விண்ணப்பிக்க வேண்டும்.**

## அவுஸ்திரேலியாவிற்குள் நுழையும்போது மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது என்பதற்கான சான்று

முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகளுக்கு உள்ள அதே பயண ஏற்பாடுகளை அணுக, மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரத்தை நீங்கள் வழங்க வேண்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்து, அவுஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில் (AIR) ஒரு மருத்துவ முரண்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தால், அவுஸ்திரேலிய கோவிட்-19 டிஜிட்டல் சான்றிதழை விமான ஊழியர்களிடம் காட்டலாம். இல்லையெனில் உங்கள் தடுப்பூசி வரலாற்று அறிக்கையைக் காட்டலாம்.

AIR-இல் உங்களின் மருத்துவ முரண்பாடு பதிவு செய்யப்படவில்லை எனில், மருத்துவப் பிரச்சினை காரணமாக உங்களால் கோவிட்-19 தடுப்பூசி போட முடியவில்லை என்பதைக் குறிக்கும் மருத்துவச் சான்றிதழை விமான

ஊழியர்களிடம் காட்ட வேண்டும். மருத்துவச் சான்றிதழ் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் மற்றும் அதில் பின்வரும் தகவல்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்:

- உங்கள் பெயர் (இது உங்கள் பயண அடையாள ஆவணங்களுடன் பொருந்த வேண்டும்)
- மருத்துவ ஆலோசனைத் திகதி மற்றும் உங்கள் மருத்துவப் பயிற்சியாளரின் விவரங்கள்
- உங்களுக்கு மருத்துவப் பிரச்சினை உள்ளது என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டும் விவரங்கள், அதாவது நீங்கள் கோவிட்-19 தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முடியாது (தடுப்பூசி முரணாக உள்ளது) என்பதைத் தெளிவாக விவரிக்கும் ஆதாரம்.

*TGA அங்கீகரிக்காத அல்லது ஒப்புதல் அளிக்காத தடுப்பூசிகளைப் பெற்றவர்கள் இந்தப் பிரிவில் சேர்க்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவும்.*

***கோவிட்-19 தொற்றால் முன்பு பாதிக்கப்பட்டிருப்பது, கோவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் இருக்க மருத்துவ முரணாகக் கருதப்படவில்லை என்று சுகாதாரத் துறை அறிவுறுத்துகிறது.***

உங்கள் மருத்துவப் பயிற்சியாளர், சுகாதாரத் துறையின் இணையதளத்தில் தடுப்பூசி போடுவதற்கு முரணான மருத்துவரீதியான பிரச்சினைகள் பற்றிய தகவலைக் காணலாம். கோவிட்-19 தடுப்பூசிக்கு முரணாகக் **கருதப்படாத** பிரச்சினைகள் பற்றிய தகவலும், அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்யத் தேவையான தடுப்பூசியைப் போட்டுக் கொள்வதிலிருந்து மருத்துவ விலக்கு பெற **ஏற்றுக்கொள்ளப்படாத** பிரச்சினைகள் பற்றிய தகவலும் இந்த இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன. **உங்கள் பார்வைக்காக**: கோவிட்-19 தடுப்பூசிக்கு எதிராக மருத்துவ முரண்பாடு இருப்பதற்கான சான்று.

உங்கள் ஆதாரம் இந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்கிறதா என்பதை உறுதிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பு. செக்-இன் செய்யும்போது விமான நிறுவனங்கள் உங்கள் சான்றிதழைக் கோரும்.

நீங்கள் போக்குவரத்து செய்யும் அல்லது நீங்கள் பயணம் செய்யவிருக்கும் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் உள்ள பிற விதிமுறைகளையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும், குறிப்பாகத் தனிமைப்படுத்திக் கொள்ளும் விதிமுறைகள் மற்றும் நீங்கள் சென்றதற்குப் பிறகு செய்ய வேண்டிய பிற பரிசோதனை விதிமுறைகள் போன்றவற்றை நீங்கள் சரிபார்க்க வேண்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வரும்போது வேறு மாநிலம் அல்லது பிரதேசத்திற்கு செல்ல திட்டமிட்டால், உள்நாட்டு பயணக்

கட்டுப்பாடுகளைச் சரிபார்க்க வேண்டும். மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் தங்கள் சொந்த பயணக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கலாம்.

உங்களுக்குப் பொருந்தக்கூடிய பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதற்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.

**ஏற்றுக்கொள்ளக்கூடிய மருத்துவச் சான்றுகளை உங்களால் வழங்க முடியாவிட்டால், அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்வதற்கு பயண விலக்கு பெற நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.**

# கோவிட்-19 பரிசோதனை

அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கு அல்லது அதன் வழியாகச் செல்ல, கோவிட்-19 பரிசோதனையின் நெகட்டிவ் முடிவு தேவை.

நீங்கள் பின்வரும் ஏதேனும் ஓர் ஆதாரத்தை வழங்க வேண்டும்:

- உங்கள் விமானம் புறப்படுவதற்கு 3 நாட்களுக்குள் எடுக்கப்பட்ட கோவிட்-19 நெகட்டிவ் பாலிமரேஸ் செயின் ரியாக்ஷன் (Polymerase Chain Reaction, PCR) அல்லது பிற நியூக்ளிக் அமிலம் பெருக்கப் பரிசோதனை (Nucleic Acid Amplification Test, NAAT) ஆதாரம்,
- உங்கள் விமானம் புறப்படுவதற்கு 24 மணிநேரத்திற்குள் மருத்துவ மேற்பார்வையின் கீழ் எடுக்கப்பட்ட நெகட்டிவ் ரேபிட் ஆன்டிஜென் பரிசோதனையின் (Rapid Antigen Test, RAT) மருத்துவச் சான்றிதழை நீங்கள் செக்-இன் செய்யும்போது உங்கள் விமான நிறுவன அலுவலரிடம் வழங்க வேண்டும்.

உங்கள் விமானம் தாமதமானால், நீங்கள் புறப்படுவதற்கு முந்தைய பரிசோதனைத் தேவைகளைப் பூர்த்தி செய்ததாகவே கருதப்படுவீர்கள். உங்களுக்குப் புதிய பரிசோதனை தேவையில்லை.

இருப்பினும், உங்கள் விமானம் வேறு திகதிக்கு மாற்றப்பட்டாலோ, ரத்து செய்யப்பட்டாலோ, மறு திட்டமிடப்பட்ட விமானம் புறப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட கோவிட்-19 நெகட்டிவ் PCR பரிசோதனை ஆதாரத்தை அல்லது மறு திட்டமிடப்பட்ட விமானம் புறப்படுவதற்கு 24 மணிநேரத்திற்குள் எடுக்கப்பட்ட நெகட்டிவ் RAT ஆதாரத்தை நீங்கள் வழங்க வேண்டும்.

நீங்கள் வழங்க வேண்டிய சான்றுகள் பற்றிய தகவலை சுகாதாரத் துறை இணையதளத்தில் காணலாம். இவற்றில் அடங்குவன:

- கோவிட்-19 பரிசோதனை விதிமுறைகள், இதில்
  - ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிசோதனைகள்
  - தேவையான குறிப்பிட்ட சான்றுகள்
  - பரிசோதனை செய்வதற்கு நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவைக் கொண்ட நாடுகளின் பட்டியல்
  - புறப்படும் முன் பரிசோதனை செய்வதற்கு விலக்கு அளிக்கப்பட்ட நாடுகளின் பட்டியல் உள்ளிட்டவையும் அடங்கும்
- நீங்கள் கோவிட்-19 நோயிலிருந்து மீண்டிருந்தும் உங்கள் பரிசோதனை முடிவு பாசிட்டிவ் என வந்தால் என்ன செய்வது

நீங்கள் போக்குவரத்து செய்யும் மற்றும் பயணிக்கும் அனைத்து நாடுகளுக்கும் தேவையான பரிசோதனை மற்றும் தடுப்பூசி விதிமுறைகள் மற்றும் ஆதாரங்களைச் சரிபார்ப்பதற்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.

பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் நீங்கள் அந்த இடத்திற்கு வந்தவுடன் கோவிட்-19 பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். கூடுதல் தகவலுக்கு, மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை விதிமுறைகளைப் பார்க்கவும்.